**UNIVERSITY OF PERADENIYA**
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 200 මට්ටම - 2023**
**கலைத்தேர்வுப் பரீட்சை (வெளிவாரி–புதிய பாடத்திட்டம்) 200 ஆவது தேர்ச்சி மட்டம் – 2023**
**Bachelor of Arts (External - New Syllabus) Examination 200 Level – Dec 2023**

**ECNE 201: நுண்ணிலைப்பொருளியற் கோட்பாடு (Microeconomic Theory)**

කාලය පැය(03) තුනයි
நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்.
Time three (03) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න 05 පිළිතුරු සපයන්න
05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
Answer 05 questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 07 කි
இவ் வினாப்பத்திரத்தில் 07 வினாக்கள் உள்ளன.
There are 07 questions in the question paper.

---

1. i. எண்மானப் பயனுக்கும் வரிசைசார் பயனுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடுகளை வேறுபடுத்துக. (07 புள்ளிகள்)
   ii. "எல்லைப் பயன்" என்பதன் அர்த்தத்தைச் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)
   iii. மொத்தப் பயனுக்கும் எல்லைப் பயனுக்கும் இடையிலான தொடர்பு யாது? வரைபட ரீதியாகக் காட்டுக. (08 புள்ளிகள்)

2. i. குறைந்து செல்லும் எல்லைப்பயன் விதிக்கும் கேள்வி விதிக்கும் இடையிலான தொடர்பை ஆராய்க. (07 புள்ளிகள்)
   ii. கேள்வி விதியினையும் கேள்வி வளையியுடன் அதற்குள்ள தொடர்பினையும் விளக்குக. (05 புள்ளிகள்)
   iii. "பயன் உச்சப்படுத்தல் நுகர்வுத் தெரிவு" என்பதனால் கருதப்படுவது யாது? விளக்குக. (08 புள்ளிகள்)

3. வாராந்த வருமானமாக ரூபா 36.00 இனைக் கொண்டிருக்கும் ஒரு நுகர்வோர் இரு பொருட்களைக் (X, Y) கொள்வனவு செய்ய விரும்புவதுடன் அவற்றின் மொத்தப் பயன் சார்புகள் முறையே பின்வரும் சமன்பாடுகளால் தரப்பட்டுள்ளன.

$$TU_x = 50Q_x - 5Q_x^2$$
$$TU_y = 32Q_y - 4Q_y^2$$

X பொருளின் விலை ($P_x$) ரூபா 5.00 எனவும் Y பொருளின் விலை ($P_y$) ரூபா 8.00 எனவும் கருதிக் கொள்க.

   i. நுகர்வோரின் சமனிலைக் கொள்வனவுத் தொகைகளைக் கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
   ii. இந்தச் சமனிலையின் அர்த்தத்தை நீங்கள் எவ்வாறு விளக்குவீர்கள்? (05 புள்ளிகள்)
   iii. சமனிலையில் பணத்தின் எல்லைப்பயனைக் ($MU_m$) கணிப்பிடுக. (05 புள்ளிகள்)
   iv. ஏனையவை தொடர்ந்தும் மாறாதிருக்க, X பொருளின் விலை 2.00 ரூபாவால் அதிகரிப்பதாகக் கருதுக இந்நுகர்வோனின் புதிய சமனிலைக் கொள்வனவுத் தொகைகள் யாதாகவிருக்கும்? (05 புள்ளிகள்)

4. i. ஒரு உற்பத்திச் சார்பை நீங்கள் எவ்வாறு விபரிப்பீர்? (05 புள்ளிகள்)
   ii. ஒரு உற்பத்திச் சார்பின் பின்வரும் மாறிகளை வரைபடமாகக் காண்பிக்குக. (05 புள்ளிகள்)
      a. மொத்த உற்பத்தி (TP)
      b. சராசரி உற்பத்தி (AP)
      c. எல்லை உற்பத்தி (MP)

iii. சம உற்பத்தி வளையியின் உடைமைகள் யாவை? (05 புள்ளிகள்)

iv. எல்லைத் தொழில்நுட்ப பதிலீட்டு வீதம் (MRTS) என்பதன் அர்த்தத்தை விளக்குக. (05 புள்ளிகள்)

5. i. நிறுவனத்தின் சமனிலை என்பதனால் கருதப்படுவது யாது? நிறைபோட்டி மற்றும் தனியுரிமையின் கீழ் நிறுவனங்களின் குறுங்கால மற்றும் நீண்டகால சமனிலையின் நிபந்தனைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. "தனியுரிமையானது வளங்களை தவறாக ஒதுக்கீடு செய்வதன்மூலம் சமூக நல இழப்பீட்டுக்குக் காரணமாக அமைகின்றது" இக்கூற்றினை நுணுக்கமாக மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

6. i. மாறி விகிதாசாரங்களின் விதியை (law of variable proportions) வரைபட ரீதியாக விளக்குக. (04 புள்ளிகள்)

ii. ஒரு பட்டரியின் ( battery) மொத்தச்செலவுச் சார்பு பின்வரும் சமன்பாட்டினால் தரப்படுகின்றது.

$TC = 250 + 5Q + 0.05Q^2$

இங்கு, Q என்பது உற்பத்தியின் அலகுகளின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது.

a. மேலுள்ள செலவுச் சார்புடன் தொடர்புபட்ட TFC, TVC, MC மற்றும் AVC சார்புகளைப் பெறுக. (10 புள்ளிகள்)

b. உற்பத்தியாளர் ஒரு நிறைபோட்டி நிறுவனம் எனக் கருதிக்கொள்க. ஒரு அலகுக்கான விலை ரூபா 10/= ஆகவிருந்தால் இலாப உச்சப்படுத்தும் உற்பத்தி மட்டத்தினைக் காண்க. (06 புள்ளிகள்)

7. பின்வரும் தலைப்புக்களில் சிறு குறிப்பு எழுதுக.

a. ஒரு சாதாரண பண்டங்களுக்கான விலைமாற்றத்தின் பதிலீட்டு விளைவும் வருமான விளைவும்.

b. அரசாங்கத்தால் விதிக்கப்பட்ட உச்சவிலை (price ceilings) மற்றும் இழிவு விலையின் (price floors) நோக்கங்கள்.

c. நுகர்வோர் மிகையும் உற்பத்தியாளர் மிகையும்.

d. கொப்-டக்ளஸ் உற்பத்திச் சார்பு.

(தலா 05 புள்ளிகள்)

(සෑම ප්‍රශ්නයකටම ලකුණු 20 බැගින්)

(சகல வினாக்களுக்கும் 20 புள்ளிகள் வீதம்)